**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 186/2024 - PW-9**

| | |
|---|---|
| Name | திரு. செல்வகுமார் |
| Husband/Father Name | சென்ராயன் |
| Village /Area | சென்னை |
| Taluk | சென்னை |
| Occupation | டாக்டர் |
| Age | 61 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.02.2026.

**(எதிரி கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை அரசு மருத்துவமனை பேராசிரியாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 11.03.2019 அன்று சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்த போது உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு வெங்கடேசன் மற்றும் ஐயப்பன் அறுவைச் சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யும் போது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். அந்த காயச் சான்றிதழக்களின் நகல்கள் முறையே **அ.த.சா.4 மற்றும் அ.த.சா.5 ஆக** (எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்கு உட்பட்டு) குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

காயம்பட்ட நபர்களுக்கு நான் தான் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டேன். அவர்கள் மருத்துவமனையில் 03.03.2019 அன்று சிகிச்சைக்காக மேற்படி நபர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. விசாரிக்கும் போது எதிரி பயன்படுத்திய ஆயுதத்தை என்னிடம் காண்பித்து கருத்துரை பெற்றார்களா என்றால் ஆயுதத்தை காண்பிக்கவில்லை. டிஸ்சார்ஜ் சம்மரி போலீசார் என்னிடமிருந்து பெறவில்லை. போலீசார் என்னுடைய காயச் சான்றிதழ்களின் நகல்களை

என்னிடம் கொடுத்தார்கள். விபத்து பதிவேட்டை நான் பார்க்கவில்லை. இரண்டு நபர்கள் குடித்துவிட்டு வாகனத்தில் சென்று கரடுமுரடான பாதையில் விழும் போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் கூர்மையான பகுதியின் மீது விழும்போது தான் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.10 17:38:55 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.